From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 100 /18

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : வளர்மதி | Father/Husband Name | : கருப்பையா |
| Age | : | Calling | : |
| Date | : 28.01.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 28 day of 01.2026.

( சாட்சி சத்தியப்பிர மாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது தாண்டவம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்கிறேன். எனது கணவர் வெளிநாட்டில் வேலை செய்து வருகிறார். கடந்த மாசி மாதம் 2017ம் வருடம் எனது பசு மாடு கன்று எதிரியின் வீட்டின் பக்கம் சென்றுவிட்டது. அன்று இரவு ஆஜர் எதிரி பால்பாண்டியும், அவரது தந்தை மணியாரம், அவரது தாயாரும் மலர்கொடி எனது வீட்டிற்கு வந்து சத்தம்போட்டனார் அப்போது ஆஜர் எதிரி என்னை பார்த்து வாடி தேவிடியா உன் கன்ற விட்டு நானும், எனது பிளையும் கீழே விழுந்துவிட்டோம் என்று அசிங்கமாக பேசி, அதன்பின்னர் பால்பாண்டி என்னை கம்பியால் எனது தலையில் அடித்தார். வழக்கின் 2ம் எதிரி கட்டையால் என் கையில் அடித்தில் கை ஒடிந்துவிட்டது. அப்போது எனது மகன் விஜயன் மற்றும் விசித்திரா உடன் இருந்தார்கள். எனது மகள் கத்தியதை பார்த்து எனது ஊரை சேர்ந்த காளிமுத்து, முருகேசன், வீரணன் மற்றும் எனது ஊர்க்காரர்கள் வந்து விலக்கிவிட்டார்கள். பின்னர், எனது தங்கச்சி கணவரான வீரணம், காளிமுத்து, முருகன் என்னை மேலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள், அங்கிருந்து மதுரை வேலம்மாள் மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். மருத்துவமனையிலிருந்து தகவல் சொல்லி மேலூர் காவல் நிலையத்திலிருந்து போலீசார் வந்து என்னிடம் வாக்குமூலம் பெற்றார்கள். தற்போது என்னிடம்

காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த புகார் வாக்குமூலம் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ).** நான் புகார் வாக்குமூலம் கொடுத்த போது எனது தங்கச்சி வீட்டுக்காரர் வீரணன், மற்றும் சித்தப்பா முருகன் உடன் இருந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி ஆஜர்.**

( எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை, இத்துடன் குறுக்குவிசாரணை முடித்துவைக்கப்படுகிறது. )